1600 தொடர் அழைப்புகள் பற்றிய முக்கிய தகவல்

1600 என்ற எண்ணில் தொடங்கும் எண் வரிசையிலிருந்து எனக்கு ஒரு அழைப்பு வந்தால் அதற்கு என்ன அர்த்தம்?
1600 என்ற எண்ணில் தொடங்கும் எண் வரிசை, ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்களால் சேவை மற்றும் பரிவர்த்தனை தொடர்பான அழைப்புகளுக்காக பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் நிதி நிறுவனங்களிடமிருந்து வரும் உண்மையான அழைப்புகளை அடையாளம் காண முடியும்.

அதிகாரப்பூர்வ அழைப்பை எவ்வாறு அடையாளம் காணலாம்?

1. வரும் அழைப்பு 1600 என்ற எண்ணில் தொடங்குகிறதா என்பதைச் சரிபார்க்கவும். தொடங்கினால், அது உங்கள் அதிகாரப்பூர்வ நிதி சேவை வழங்குநரிடமிருந்து வந்த சேவை தொடர்பான அழைப்பாகும்.
2. சந்தேகம் இருந்தால், நிதி நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் அல்லது வாடிக்கையாளர் சேவை எண்ணின் மூலம் அழைப்பாளரின் அடையாளத்தை உறுதிப்படுத்தவும்.

டிஎன்டி மற்றும் தேவையற்ற வணிகத் தொடர்புகள் பாதுகாப்பு

தேவையற்ற வணிகத் தொடர்புகளை ஒரு நபர் எவ்வாறு தவிர்க்கலாம்?

வாடிக்கையாளர்கள் அனைத்து வணிகத் தொடர்புகளையும் (அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள்) முடக்கலாம் அல்லது பின்வரும் ஏழு குறிப்பிட்ட வகைகளிலிருந்து வரும் யூசிசி

-களை மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் முடக்கலாம்:

1. வங்கி / காப்பீடு / நிதி தயாரிப்புகள் / கிரெடிட் கார்டுகள்
2. ரியல் எஸ்டேட்
3. கல்வி
4. சுகாதாரம்
5. நுகர்வோர் பொருட்கள் மற்றும் வாகனங்கள்
6. தகவல் தொடர்பு / ஒளிபரப்பு / பொழுதுபோக்கு / தகவல் தொழில்நுட்பம் (IT)
7. சுற்றுலா மற்றும் ஓய்வு. தேசிய வாடிக்கையாளர் விருப்பப் பதிவேட்டில் உங்கள் விருப்பங்களைப் பதிவு செய்வதன் மூலம் இதைச் செய்யலாம். இது ' டிஎன்டி பதிவேடு' என்றும் அழைக்கப்படுகிறது.

என்.சி.பி.ஆர். இல் பதிவு செய்வதற்கான நடைமுறை என்ன?

டி.என்.டி. பதிவு

யூசிசி-ஆல் ஏற்படும் அசௌகரியத்தைத் தவிர்க்க, ஒரு வாடிக்கையாளர் அனைத்து வணிகத் தொடர்புகளையும் முடக்க அல்லது விருப்பமான வகைகளைத் தேர்ந்தெடுக்க, தொலைத்தொடர்பு சேவை வழங்குநரின் செயலி/இணையதளம், டிராய் டிஎன்டி

செயலி அல்லது '1909' என்ற எண்ணிற்கு அழைப்பு/குறுஞ்செய்தி (SMS) மூலம் பதிவு செய்யலாம்.

புகார் அளிக்கும் நடைமுறை என்ன?

புகார் பதிவு செய்தல்:

1. டிஎன்டி-இல் பதிவு செய்தும் உங்களுக்கு ஸ்பேம் செய்திகள் வந்தால்: உங்கள் தொலைத்தொடர்பு சேவை வழங்குநரின் செயலி/இணையதளம், டிராய் டிஎன்டி செயலி அல்லது '1909' என்ற எண்ணிற்கு அழைப்பு/குறுஞ்செய்தி மூலம் டிஎன்டி புகார் அளிக்கலாம்.
2. மோசடி எனச் சந்தேகிக்கப்படும் தொடர்புகளைப் பெற்றால்: கடந்த 30 நாட்களுக்குள் பெறப்பட்ட மோசடித் தொடர்புகள் குறித்து, தொலைத்தொடர்புத் துறையின் 'சக்ஷு' தளத்தில் https://sancharsaathi.gov.in/sfc/ என்ற இணைய முகவரியில் புகார் செய்யவும்.

3. மோசடி அல்லது சைபர் குற்றம் ஏற்கனவே நடந்திருந்தால்: நிதி மோசடியால் நீங்கள் ஏற்கனவே பணத்தை இழந்திருந்தாலோ அல்லது சைபர் குற்றத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலோ, சைபர் குற்ற உதவி எண் '1930' அல்லது https://www.cybercrime.gov.in என்ற இணையதளத்தில் உடனடியாகப் புகார் அளிக்கவும்.